# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 5 | ஜுலை 1992 | இதழ் 7





வெளியிடுவோர் :

ஈரோடு கிறிஸ்துவின் சபையார்

2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002.

ஈரோட்டில் நீங்கள் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002 (ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

ஞாயிறு : காலை 9-30—11-00...காலை ஆராதனை

,, : பகல் 11-00—12-00...ஞாயிறு பள்ளி

,, : மாலை 7-15—8-30...மாலை ஆராதனை

செவ்வாய் : மாலை 7-15—8-30...மாதவக்காடு வேத ஆராய்ச்சி வகுப்பு

வியாழன் : மாலை 7-15—8-30...வேதாகம ஆய்வு

வெள்ளி : மாலை 7-00—8-30...ஜெப ஆராதனை (2-ம் வெள்ளி மாதாந்திர ஜெப ஆராதனை மாலை 5-00 முதல் இரவு 9-00 மணிவரை)

சனி : மக்கள் சந்திப்பு

## தலைப்புச் செய்திகள்


1. *நீங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டீர்களா?* **1-6**
2. *கர்த்தருடைய பணியைப் பற்றிய சிந்தனையில்!* **7-9**
3. *பெற்றோர் கடமை* **10-12**
4. *இரட்சிக்கப்படுவதற்கு ஒருவன் என்ன செய்ய வேண்டும்?* **13-16**
5. *சான்றாண்மைக்குரிய நல்லியல்புகள் இல்லாமல் நல்லது செய்வது எப்படி?* **17-18**
6. *உன்னை நீயே எண்ணிப்பார்!* **19-23**
7. *கிறிஸ்துவும் அவருடைய சபையும்* **24-27**
8. *அன்றாட கிறிஸ்தவ வாழ்க்கை* **28**

THIRUMARAI AASAAN

Editor
E.Z. SELVANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Manalmedu Street, ERODE-638 002, Tamil Nadu, India:
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol 5. July—1992 Issue 7

ஆசிரியவுரை

# நீங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டீர்களா?

சமீப காலத்தில் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிற மக்கள் மத்தியில் ஒரு கேள்வி பிரபல மடைந்து வருகிறது. ''நீங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டீர்களா?'' என்பதே அந்தக் கேள்வி.

இது மிகவும் முக்கியமான கேள்வி என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் இதற்கு அளிக்கப்படும் விளக்கமும் பதிலும் சரியானவைகள் தானா என்பது கேள்விக் குறியாக இருக்கிறது. ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய திவ்விய வல்லமையாலும் ஞானத்தினாலும் நமக்கு தந்திருக்கிற தேவன் இந்த முக்கியமான கேள்விக்கு சரியான விளக்கத்தைத் தராமல் இருப்பாரா? இது இம்மைக்கும் மறுமைக்கும் தேவையான சங்கதி யாயிற்றே. வாருங்கள், பரிசுத்த வேதாகமத்தில் தேடி வாசிப்போம்.

**''ஒருவனுடைய உணர்வுகளை வைத்து ஒருவன் இரட்சிக்கப்பட்டிருக்கிறான் என்று கண்டு கொள்ள முடியுமா?**

ஒருவன் இரட்சிக்கப்பட்டு விட்டான் என்பதை அவனுடைய உடல் சிலிர்ப்பையும், ஆவேசக் கூச்சலையும், அர்த்தமற்ற உளறல்களையும், அஸ்.. புஸ்.. என்று அலட்டிக் கொள்வதையும் வைத்துக் கண்டு கொள்ள முடியும் என்று சிலர் நம்புகின்றனர்; போதிக்கின்றனர். நம்முடைய நாடு மூட நம்பிக்கையின் விளை நிலம். எதைச் சொன்னாலும் நம்புவதற்குத் தயாராக இருக்கும்

மக்களுக்குப் பஞ்சமில்லை. இந்த அறியாமையை தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொண்டு தங்கள் நயவசனப்பினாலும், இச்சகப் பேச்சினாலும் கிறிஸ்தவ அறத்தின் தூய்மையை மாசு படுத்தி நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யாமல் தங்களுடைய வயிற்றுக்கே ஊழியம் செய்து கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிற (ரோமர் 16:18) ஒரு கூட்டம் வேலி முள் தழைத்து வளருவதைப் போல் வளர்ந்து கொண்டிருக்கிறது என்று மிக்க மனவேதனையுடன் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது.

இவர்கள் பண்ணுகிற ஆர்ப்பாட்டங்களையும், போடுகிற வெட்டிக் கூச்சலையும் வைத்து ஒருவன் இரட்சிக்கப்பட்டு விட்டான் என்பது சரியானால் இவர்களை விட பன்மடங்கு வேடிக்கை காட்டித் தங்கள் பக்தி நிலையை வெளிப்படுத்துகிற விக்கிரக ஆராதனைக்காரர்கள் இவர்களைக் காட்டிலும் அதிக மதிப்பெண்கள் பெற்று முதல் பரிசைத் தட்டி சென்று விடுவார்களே! நான் மிகவும் அதிகமாக மதிக்கிற தேவ ஜனமே, சிந்திப்பீர்!

ஒருவனுடைய உணர்வுகளை வைத்து ஒருவனுடைய இரட்சிப்பை உறுதி செய்ய முடியாது. உணர்ச்சி என்பது நாம் ஒன்றை நம்புகிறதினால் ஏற்படும் விளைவுதான். அதுவே முழு முதற் காரணமல்ல. நாம் எதை நம்புகிறோமோ அதை வைத்து உணர்ச்சிகள் உருவாகிறது. அந்த நம்பிக்கை நமக்குத் தரப்படும் போதனைகளால் உருவாகின்றன. அது தவறாகவும் இருக்கலாம். ஒரு மனிதன் தவறான போதனையை ஏற்றுக் கொண்டு அதன் அடிப்படையில் தன் விசுவாசத்தை அமைத்துக் கொண்டு அதன்படி வெகு உண்மையாய் நடந்து வந்தாலும் அது நமக்கு இரட்சிப்பை ஈட்டித்தராது.

எல்லா மதத்தினரும் தாங்கள் தான் சரியான முக்தி மார்க்கத்தார் என்று நம்புகின்றனர். ஆனால் எல்லாமே உண்மையாகி விடுமா? மற்ற மார்க்கத்தாரைப் பற்றி நமக்குத் தெரியாது. ஆனால் கிறிஸ்துவ மார்க்கத்தைப் பொறுத்தவரை இரட்சிப்புப் பற்றி புதிய ஏற்பாட்டில் நமக்கு மிகத் தெளிவான போதனைகள் இருக்கின்றன.

ஆனால் இதில் விசனிக்கத்தக்க விஷயம் என்னவெனில் மக்களில் பெரும்பாலோர் மார்க்க விஷயத்தில் போதிய அக்கரை காட்டுவதில்லை. தாங்கள் நம்புகிறதில் பிடிவாதமாக இருக்கிறார்கள். நான் நம்புவது, உண்மையா, பொய்யா என்று எனக்கு கவலையில்லை; கர்த்தர் எனக்குக் கொடுத்த வெளிச்சத்தில் நான் போய்க் கொண்டிருக்கிறேன் எனக்கு மோட்சம் உறுதி எங்கள் பெரிய பாஸ்டர் மூன்றாம் வானத்துக்கு ஏறிப் போய் ஜீவ புத்தகத்தைப் புரட்

டிப் பார்த்து விட்டு வந்திருக்கிறார் என குருட்டுத் தன்மாக் அடித்துக் கூறிக் கொண்டு, முடிந்தால் மற்றவர்களையும் தங்கள் பக்கம் இழுத்துக் கொள்ள முயல்கின்றனர்.

ஆனால் இரட்சிப்பை நமக்கு வாக்குத் தத்தம் செய்திருக்கிற இயேசு கிறிஸ்து .. **சத்தியத்தையும் அறியுங்கள்; சத்தியம் உங்களை விடுதலையாக்கும்** என்று கூறுகிறார். (யோவான் 8:32) **''எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமான தைப் பிடித்துக் கொள்ளுங்கள்''** என்று பரிசுத்த ஆவியான வர் சொல்லுகிறார் (1 தெச 5:21) இது விஷயத்தில் யார் சொல்வது நியாயமாகவும், உண்மையாகவும் இருக்கும் என்பதை நீங்களே சொல்லுங்கள்,

இன்னும் அநேகர், நாம் எதை விசுவாசிக்கிறோமோ அதில் உண்மையாயிருந்தால் போதும் என்று வாதிடுகின்றனர், பவுல் ஆக மாறின சவுலைப் போல தான் நம்பின காரியத்துக்காக முழு மூச்சுடன் பாடுபட்டவர்கள் மிக மிகச் சிலரே. அப்படிப்பட்ட வைராக்கியம் உள்ள சவுல் தன் நிலையை ஒரு கட்டத்தில் மாற்றிக் கொண்டார். அது எல்லோருக்கும் முடிகிற எளிதான காரியம் அல்ல. அதற்கு ஆண்மையும் மனத்தின்மையும் வேண்டும். சவுல் சிரிய செம்மனமுடையவராய் இருந்தபடியால் (லூக் 8:15) தன் தவறுக்காக மனஸ்தாபப்பட்டு, அதை விட்டு விட்டு உண்மையைப் பற்றிக் கொண்டார்.

ஆம், நண்பர்களே, நேர்மையான உள்ளம் படைத்த ஒரு மனிதர் ஒரு பொய்யை மெய்யென்று நம்பிக்கொண்டிருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவரை அணுகி, உண்மை இப்படி இருக்கிறது என்று எடுத்துச் சொல்லப்போனால் இரண்டு காரியங்கள் நிகழ வாய்ப்புண்டு. ஒன்று : அவர் தன்னுடைய தவறுகளுக்காக மனம் வருந்தி அதை விட்டு விடுவார். அல்லது தன் பிடிவாதத்தில் இன்னும் கெட்டியாகி இதுவரை அறிந்தும் அறியாமலும் செய்து வந்த தவறைக் கூசாமல் பகிரங்கமாக செய்ய தீவிரிப்பார். நீங்கள் எப்படிப்பட்டவர்கள்?

இன்னும் சில பேர் நான் என் மனச் சாட்சிப்படி குற்றமில்லாமல் நடந்து கொண்டிருக்கிறேன் எனக்கு இரட்சிப்பும் மோட்சமும் உறுதி என்று கூறுகின்றனர். ஒருவன் சுத்த மனசாட்சியோடு இருப்பது ஒன்றே இரட்சிப்பைப் பெற்று தந்து விடாது. மனசாட்சி என்பது நாம் ஒன்றைக் குறித்து கொண்டிருக்கிற அபிப்பிராயமே ஒருவன் ஒரு காரியத்தைச் சரி என்று ஏற்றுக் கொண்டால் மனச் சாட்சியும் ஏற்றுக் கொள்ளுகிறது. நாம் ஒன்றைத் தவறு என்று நினைத்துக் கொண்டிருந்தால் அதை மனச் சாட்சியும் தவறு என்றே

நினைக்கிறது அதாவது ஒரு காரியத்தில் உள்ள நியாய அநியாயங்களை மனச்சாட்சி நமக்கு உணர்த்துவதில்லை. உண்மை எது பொய் எது என்று கண்டு பிடித்துச் சொல்லுகிற ஆற்றலும் மனச் சாட்சிக்கு கிடையாது. ஆகையால் ஒருவனுடைய மனச்சாட்சி ஒன்றை ஏற்றுக் கொள்ளுகிறதினாலேயே தேவன் அதை அங்கீகரித்து பாவ மன்னிப் அருளுவார் அல்லது அது நியாயமானது என்று நினைப்பது சரிப் பட்டு வராது. **''மனுஷனுக்குச் செம்மையாகத் தோன்றுகிற வழி உண்டு. அதன் முடிவோ மரண வழிகள்''** (நீதி 14:12, 16:15) என்று ஞானி சாலமோன் மூலமாக பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறார். அந்த தரிசு பட்டணத்து சவுல் பவுலாக மாறுவதற்கு முன்னர் சபைகளைக் கொடுமைப் படுத்தினான். பிற் காலத்தில் அதைப் பற்றி அவரே சொன்னது. **''சுத்த நல் மனச் சாட்சியோடே தேவனுக்கு முன்பாக நடந்து வந்தேன்''** (அப் 23:1) ஆனால் அது தவறு என்று பின்னர் புரிந்து கொண்டு வருத்தப்படுகிறார். (கலா 1:13,14; 1தீமோ 1:13) ஆகவே, நான் மனச்சாட்சிப்படி நடக்கிறேன் என்பதை வைத்து இரட்சிப்பின் நிச் சயத்தை நிர்ணயிக்க முடியாது.

அப்படியானால் இரட்சிப்பின் நிச்சயத்தை அறிந்து கொள்ள என்ன தான் வழி என்று கேட்கிறீர்களா? அது மிக சுலபமானது ஆனால் கொஞ்சம் வேதாகமத்தைப் புரட்டியாக வேண்டும். அது தானே சிரமம் என்கிறீர்களா? ஆம், நண்பர்களே! நம்முடைய இந்த பலவீனத்தைப் புரிந்து கொண்டு தான் சாத்தானும் அவனுடைய சேனைகளும் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொண்டு சீஷத்துவத்தின் விலையைக் கொடுக்க விரும்பாத மக்களின் இருதயங்களில் பலவிதமான விஷ விதைகளை விதைத்து வளர்த்து வருகிறார்கள். இந்த விஷயத்திலாவது கொஞ்சம் விழிப்பாக இருந்து சொல்வதைக் கவனித்துக் கேளுங்கள்.

இரட்சிப்பு என்பது தேவனுடைய ஈவு, ''நான் இரட்சிக்கப்பட்டு விட்டேன்'' என்று சம்பந்தப்பட்ட பாவியே தம்பட்டம் அடித்துக் கொள்வது அறிவீனம். ஒருவனுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு விட்டன என்ற அறிவிப்பு பரலோகத்திலிருந்து வரவேண்டும். எடுத்துக் காட்டாக ஒரு குற்றவாளி சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம் ஒரு இரவு திடீரென்று ஒரு பயங்கர கூச்சல் கேட்டது. சிறைக்காவலர் ஓடி வந்து என்னப்பா? என்று பதட்டத்துடன் விசாரித்தார். அவன் ஒரு மாதிரி உடம்பைச் சிலிர்த்துக் கொண்டு நான் மன்னிக்கப்பட்டு விட்டதாக ஒரு கனவு கண்டேன். கதவைத் திறந்து விடுங்கள் நான் வீட்டுக்குப் போக வேண்டும் என்று கூறினான். நண்பர்களே அவன் விடுதலையாவதற்கு அவனுடைய கனவும், உணர்ச்சியும்

போதுமா? அவனை நியாயம் விசாரித்து மன்னிப்பு அளிக்க வல்ல அதிகாரமுள்ள நீதிபதி அவனை விடுவிக்கும் உத்தரவு போட்டால் அல்லவா அவன் விடுதலை அடையமுடியும்! அதுபோல பாவியாகிய ஒருவனை தேவன் புரிந்து மன்னிக்காமல் இவனாகவே நான் இரட்சிக்கப் பட்டு விட்டேன் என்று பிதற்றுவானானால் அவன் இரக்கப்பட வேண்டியவனேயன்றி இரட்சிக்கப்பட்டவன் ஆகி விடுவானா? சிந்திப்பீர்!

**(அ) கர்த்தர் பாவ மன்னிப்புப் பெற சில நிபந்தனைகளை விதித்திருக்கிறார்-**

பாவ மன்னிப்பை அருள, சில நிபந்தனைகளை விதிக்க தேவனுக்கு அதிகாரம் உண்டு என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அந்த நிபந்தனைகளை நிறைவேற்றினாலே இரட்சிப்பு சாத்தியமாகும். அப்படியானால் அந்த நிபந்தனைகள் என்ன?

(1) **விசுவாசம் :** "நீங்கள் உலகம் எங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் **விசுவாசமுள்ளவனாகி** ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்" (மாற்கு 16: 15,16)

(2) **மனந்திரும்புதல் :** "அப்படியல்ல வென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் நீங்கள் **மனந் திரும்பாமற்** போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள்" (லூக் 13:3,5)

(3) **அறிக்கையிடுதல் :** "நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும். இரட்சிப்புண்டாக வாயினாலே **அறிக்கை** பண்ணப்படும்". ரோமர் 10 : 10.

(4) **திருமுழுக்குப் பெறல் :** "அதற்குப் பிலிப்பு, நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான். அப்பொழுது அவன் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறேன் என்று சொல்லி, இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும், மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள். பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான்" (அப் 8:37,38, அப் 2:38 ஐயும் பார்க்க)

தேவன் எவ்வாறு பாவ மன்னிப்பளித்து இரட்சிக்கிறார் என்று மேற் சொன்ன வசனங்கள் தெளிவாகக் கூறுகின்றன. இதை தேவனுடைய 'இரட்சிப்பின் திட்டம்' என்று கூறலாம், இதை விட்டு விட்டு மனிதன் தன்னிச்சையாக எதைப் போதித்தாலும் நம்பினாலும் அது இரட்சிப்பைத் தராது. பாவத்திலிருந்து மனிதனுக்கு விடுதலையும் கிடைக்காது.

**பாவத்திலிருந்து விடுதலையடைவதற்கு சுவிசேஷத்துக்கு கீழ்ப்படிவது அவசியம்.**

மக்கள் பாவங்களில் வாழ்வதே இரட்சிப்பை இழந்து போவதற்குக் காரணமாயிருக்கிறது. அதற்கு பரிகாரமாக சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்தால் இரட்சிப்பு பெறமுடியும், பாவ மன்னிப்பு அடைவதற்கு வகுத்துத்தரப் பட்டுள்ள வழியையே சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிதல் என்கிறோம் (ரோமர் 10:16)

ஆனால் பெரும் பான்மையான கிறிஸ்தவர்களுக்கு இதில் நாட்டம் ஏற்படா வண்ணம் இப் பிரபஞ்சத்தின் தேவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கி வைத்திருக்கிறான் (2கொரி 4:4) அவர்களுக்கு வேண்டியதெல்லாம் செத்தால் கல்லறையில் இடம். பிழைத்தால் திருமணம் செய்து வைப்பதற்கு ஓர் ஆலயம். இரட்சிப்பு நித்திய ஜீவன், மோட்சம் இதெல்லம் இரண்டாம் பட்சம். இந்நிலை என்று மாறுமோ?

சகோதரர்களே, சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படியாமல் இருப்பது அபாயகரமானது. **''நியாயத் தீர்ப்பு தேவனுடைய வீட்டில் துவங்குங் காலமாக இருக்கிறது முந்தி நம்மிடத்திலே அது துவங்கினால் தேவனுடைய சுவிசேஷத்துக்கு கீழ்ப் படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்?**(1பேது4:17) இந்தக் கேள்விக்கு அப்போஸ்தலனாகிய பவுல் பதில் அளிக்கிறார் கேளுங்கள்: **''தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினைச் செலுத்தும்படிக்கு**

**கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும் ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும் வானத்திலிருந்து வெளிப்படும் போது அப்படியாகும்;**

**அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப் படத்தக்கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிறவர்கள் எல்லாரிடத்திலும் ஆச்சரியப் படத்தக்கவராயும் அவர் வரும்போது**

**அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும் அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்''.** (2 தெச 1:7-10) இரண்டு வித்தியாசமான நிலை (1) கீழ்படிந்தவர்களுக்கு நித்திய இளைப்பாறுதல் (6-ம் வசனம்) கீழ்ப்படியாதவர்களுக்கு அழிவாகிய தண்டனை. நண்பனே நீர் எதைத் தெரிந்து கொள்ளப் போகிறீர்?

**E.Z. செல்வநாயகம்**

# கர்த்தருடைய பணியைப் பற்றிய சிந்தனையில்!

நான் பல ஆண்டுகளாகக் கர்த்தருடைய பணியைச் செய்யும் வாய்ப்புப் பெற்றிருக்கிறேன். உலகத்தின் பல பாகங்களில் அவருடைய செய்தி பரவுவதைக் கண்டிருக்கிறேன். இந்த மாபெரும் நாட்டிலும் கூட சத்தியம் பரவி வருவதற்கு என்னுடைய சிறு பங்கு உண்டு.

அவருடைய பணிகளைப் பற்றி எனக்கு இருக்கும் ஆசைகளும் நம்பிக்கையும் ஏராளம். அந்த கனவுகளும் ஆசைகளும் வீண் போகவில்லை. ஓரளவுக்கு நிறைவேறிக் கொண்டிருப்பதைக் கண்டு பூரிப்படைகிறேன், இன்னும் கூட சிறப்பாக நடைபெற்று என் வாழ்நாள் காலத்திலேயே என்னுடைய ஆசைகளும் கனவுகளும் முழுவதும் இல்லாவிட்டாலும் பெரும்பகுதி நிறைவேறாதா என்று நான் ஏங்குவதுண்டு. உங்களுக்கும் கூட அப்படிப்பட்ட ஆசைகள் இருக்கலாம். என்னுடைய ஆசைகள் கனவுகள் சிலவற்றை கீழே பட்டியல் போட்டுக்காட்டியிருக்கிறேன். அவைகளை நாம் அடைய வேண்டிய இலக்கு என்று கூடக் குறிப்பிடலாம்.

1. கிறிஸ்துவின் நற்செய்தி தொடர்ந்து இந்த மாபெரும் நாட்டில் பிரசங்கிக்கப்பட்டு, இந்த மண்ணின் மூலை முடுக்குகளிலெல்லாம் பரவவேண்டும்.

2. இங்கு மட்டுமல்ல, அண்டை நாடுகளுக்கும் எடுத்துச் செல்லப்பட வேண்டும்.

3. பல பிரசங்கிமார்கள் எழும்பி, தங்கள் சொந்தக் கால்களில் நின்று நற்செய்திகளை நாடெங்கிலும் பரப்பி புதிய ஏற்பாட்டுச் சபைகளை பட்டி தொட்டிகளிலெல்லாம் நிறுவ வேண்டும்.

4. ஒவ்வொரு பிராந்திய சபையின் உறுப்பினர்களும் கொடுக்கிறதினால் உண்டாகும் ஆசீர்வாதத்தையும் மகிழ்ச்சியையும் புரிந்து கொண்டு, உற்சாகமாய்க் கொடுத்து தங்களுடைய ஊழியர்களையும் தங்கள் சபைகளின் தேவைகளையும் தாங்களே தாங்கிக் கொள்ளவும் நற் செய்தி பரவாத இடங்களுக்கு ஆள்உதவி செய்யவும் வேண்டும்.

5. 1 தீமோ 3:6 அதிகாரம், தீத்து முதலாம் அதிகாரம் ஆகியவைகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகளையுடைய மூப்பர்களும், உதவிக்காரர்களும் உருவாக்கப்பட வேண்டும்.

6. அனைத்து பிரசிங்கிமார்களும் பிராந்திய சபைகளும்ஒன்றுபட்டு நற்செய்தியை பட்டித் தொட்டிகளுக்கெல்லாம் எடுத்துச் செல்ல இணைந்து செயல்பட வேண்டும்.

7. இந்நாட்டிலுள்ள சபைகள் வேறு நாட்டவரின் கைகளை எதிர் பார்த்துக் கொண்டிராமல் தங்கள் தேவைகளை தாங்களே பூர்த்தி செய்துகொண்டு சபையின் சுயதேவை பூர்த்தி செய்யப்பட்டு சபையின் தன்னாட்சித் தன்மையைக் காத்துக் கொள்ள வேண்டும்.

8. இந்நாட்டின் இளைஞர்களுக்கு வேதாகம அறிவும் இதரக்கல்வி சம்மந்தப்பட்ட காரியங்களையும் தாங்களே பார்த்துக் கொள்ளக் கூடிய அளவு பள்ளிகளையும் கல்லூரிகளையும் நிறுவுகிற அளவுக்கு பொருளாதாரத்திலும் எண்ணிக்கையிலும் வளர வேண்டும்.

9. நற்செய்தியைப் பரப்பும் மாத இதழ்கள், சிற்றறிக்கைகள் போன்றவற்றைத் தாங்களே எழுதக் கூடிய எழுத்தாளர்கள் உருவாக வேண்டும்.

10. அங்கொன்று இங்கொன்று என்று இல்லாமல் அனைத்துப் பிராந்திய சபைகளும் வேதாகமத்தை தன்னுடைய அங்கத்தினர்களுக்கு முறையாகக் கற்றுக் கொடுக்கத் திட்டமிட்டு, அதில் அனைத்து அங்கத்தினர்களும் கலந்துகொள்ள ஊக்குவிக்கவேண்டும்.

11. சபையில் உள்ள பெண்கள் தாங்களாகவே பெண்களுக்கான வகுப்புகளை நடத்தவும், ஞாயிறு பள்ளிகள் நடத்தவும், பெண்கள் மத்தியிலே பிரசங்கிக்க கூடிய அளவுக்கு தங்கள் தகுதிகளை வளர்த்துக் கொள்ளவும் வேண்டும்.

ஆம், நான் தொடர்ந்து கனவுகள் கண்டு கொண்டேயிருக்கிறேன். இன்னும் அந்நிலையில் தொடர்வேன். சபைகள் எண்ணிக்கையிலும் ஆவியிலும் வளரவேண்டும். சகோதர்கள் தங்களுடைய சபை வளர்ச்சிக்கான திட்டங்களைத் தீட்டி அவைகளை நிறைவேற்ற உழைக்க வேண்டுமென்று விரும்புகிறேன். நாம் எப்போதுமே 'ஐயோ, அது முடியாது, ஐயோ இது கூடாது' என்று கூறி பிரச்சினைகளைச் சந்திக்கவே பயப்படுகிறோம். நம்முடைய விசுவாசம் எங்கே? கர்த்தருடைய கரம் நம்மோடு கூட இருக்கும் போது எது தான் முடியாது? நாம் நம்முடைய கண்களைத் திறந்து தேவைகளைக் காண முடிந்தால் நாம் செயல்படுவோம். கர்த்தர் அவைகளை விளையச் செய்வார்.

நாம் பலவீனர், நாம் குறைவானவர்கள், நாம் வறுமையில் வாடுபவர்கள் என்று நினைத்துக் கொள்ளும் தாழ்வு மனப்பான்மையை நம் நெஞ்சை விட்டு அகற்றி விட வேண்டும். நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும் குடும்ப வாழ்க்கையிலும் நம்முடைய தேவை

களைச் சந்திக்க நாம் திட்டமிடுகிறோம். அந்த திட்டங்களை நிறைவேற்ற எங்கே கடன் வாங்கலாம், யாருடைய சிபாரிசைத் தேடலாம் என்று சதா சிந்திக்கிறோம். குழந்தைகளின் கல்வி வசதிக்காகவும், அலுவலகங்களுக்கும், பணி மணைகளுக்கும் செல்வதற்கு வசதியாகவும் நம்முடைய வீடுகளை வாடகைக்கு அமர்த்தியோ, கிரயத்திற்கு வாங்கவோ முயற்சி செய்கிறோம். வெற்றியும் பெறுகிறோம். நம்முடைய தேவைகளை நாம் சந்திப்பதற்கு நமக்குத் திராணியிருக்குமானால், பல குடும்பங்கள் அடங்கிய சபையின் தேவைகளைச் சந்திப்பது ஏன் முடியாது? நம்முடைய ஆள்பலத்தையும் கொடுக்கும் சக்திகளையும் அதிகப்படுத்தி சபையின் தேவைகளை ஏன் சந்திக்க முடியாது? கர்த்தருடைய காரியத்தில் நாம் முனைப்புடன் ஈடுபாடு கொள்ளும் போது நம்மை சிக்கலில் தவிக்க விட்டு விட்டு கர்த்தர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பாரா? நிச்சயமாய் அவர் கைக்கொடுப்பார். இந்த விசுவாசத்தோடுதான் நம்முடைய வசதி வாய்ப்புக்களை முழுமையாய் பயன்படுத்தி கர்த்தருடைய ஒத்தாசைகளைப் பெற்று வெற்றிகளைக் குவித்து பீடு நடைபோடுவோம் என்று கனவு காண்கிறேன்.

உங்கள் கனவுகள் எப்படிப்பட்டது? அவைகளை நனவாக்க உங்களுடைய திட்டமென்ன? முதலாவது நான் கர்த்தருக்காக என்னச் செய்கிறேன் என்று நம்மை நாமே முதலில் கேட்டுக் கொள்ள வேண்டும். அப்போஸ்தலன் பவுல் கூறியதை நினைத்துப் பாருங்கள். **என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு** என்கிறார். (பிலி 4;13) அவருக்கு அப்படிப்பட்ட விசுவாசம் இருந்ததானால் அது ஏன் நமக்கும்இருக்கக் கூடாது? பின்னே ஏன் தாமதம்? நம்முடைய எதிர்காலத்தைப் பற்றி சிந்தியுங்கள். சிந்திப்பதோடு நில்லாமல் அதைச் செயல்படுத்த முற்படுங்கள். கர்த்தர் நம்மோடே இருந்து வெற்றி பெறச் செய்வார்.

**J.C. சோட்**

தூற்றிக்கொண்டு திரிகிறவன் இரகசியங்களை வெளிப்படுத்துவான் ஆதலால் தன் உதடுகளினால் அலப்புகிறவனோடே கலவாதே, தன் தகப்பனையும், தன் தாயையும் தூஷிக்கிறவனுடைய தீபம் காரிருளில் அணைந்துபோகும்.

தீமைக்குச் சரிக்கட்டுவேன் என்று சொல்லாதே: கர்த்தருக்குக் காத்திரு. அவர் உன்னை இரட்சிப்பார்.

வாலிபரின் அலங்காரம் அவர்கள் பராக்கிரமம்,
முதிர் வயதானவர்களின் மகிமை அவர்கள் நரை.

# பெற்றோர் கடமை

பெற்றோர்களுக்கு பிள்ளை வளர்ப்பில் உள்ள பொறுப்பைப் பற்றி அறியாதவர் இலர். பிள்ளையானவனை நடத்த வேண்டிய வழியில் நடத்து (நீ 22:6) போன்ற வசனங்கள். அவைகளை நமக்குச் சுட்டிக் காட்டுகின்றன. கர்த்தருடைய ஜனமாக இருப்பவர்கள் அதைக் கண்டிப்பாகக் கடைபிடிப்பார்கள். நடத்த வேண்டிய வழியில் என்று சொல்லும்போது தேவனுடைய ஆலோசனையில் என்றே பொருள். பெற்றோர்களின் கடமைகளில் சிலவற்றைப் பார்ப்போம்.

**தார்மீக ஒழுக்க நெறிகள் :**

சன்மார்க்கத்தைப் பற்றியும், ஒழுக்க நெறிகளைக் குறித்தும் பல வசனங்கள் போதிக்கின்றன. நீதி 22 : 6 ஐயே எடுத்துக் கொள்ளுங்களேன், "நடத்த வேண்டிய" என்ற வார்த்தையில் தேவ பக்திக் கேற்ப என்ற அர்த்தம் தொக்கி நிற்கிறதல்லவா? அந்தப் பயிற்சியில் ஒழுக்கமும் அடக்கம்தானே. கீழ்க்காணும் வசனத்தைக் கூடக் கவனியுங்கள் **'கர்த்தருக்கு ஏற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக'** (எபே 6:4) இந்த வசனம் பிள்ளைகளை கர்த்தருக்கேற்ற சிட்சையில் வளர்ப்பதை வலியுறுத்துகிறது. வெகு காலத்துக்கு முன் வாழ்ந்த மோசே கூட **"நீ அவைகளை உன் பிள்ளைகளுக்கு கருத்தாய்ப் போதித்து நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கும் போதும் வழியில் நடக்கிற போதும், படுத்துக் கொள்ளுகிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசு"** என்று இஸ்ரவேல் ஜனங்களுக்குக் கட்டளையிடுகிறார். (உபா 6:7). ஒரு குழந்தையை ஒழுக்கமாய் வளர்க்க வேண்டும் என்கிற விஷயத்தில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. இது வாரத்தின் ஏழுநாளும், ஒரு நாளின் 24 மணி நேரமும் செய்யப்பட வேண்டிய வேலை. ஒரு தாய் தன் குழந்தைக்கு கல்விபுகட்ட முனைகிறாள். அதற்கும் கூட ஒரு ஒழுங்கு தேவைப் படுகிறது. இன்னும் குழந்தைகள் சம்பந்தப்பட்ட எந்தக் காரியத்தையும் ஒரு ஒழுங்குடன் செய்வதுதான் நல்லது என்பதில் யாருக்காவது சந்தேகம் உண்டா? நாம் சிறு பிள்ளைகளாக இருந்த பொழுது நம்முடைய பெற்றோர்கள் நமக்கு என்ன சொல்லிக் கொடுத்தார்கள் என்பதை நினைவு கூறுவது நல்லது. நம்முடைய பெற்றோர்கள் கற்றுக் கொடுத்த ஒழுக்க நெறிகளினால் நாம் சில நற்பண்புகளைக் கற்றுக் கொண்டு வாழ்க்கையில் மேம்பாடடையவும் முடிந்தது என்பது உண்மையல்லவா?

**ஒழுக்கக் கேடுகளின் அபாயம் :** ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் பிள்ளைகள் தவறு செய்யக் கூடியவர்கள் என்பதை அறிந்தே இருக்கிறார்கள். அநேக வேளைகளில் பிள்ளைகள் அவர்களுக்கு நேரிடும் சோதனைகளின் ஆழத்தை உணராமல் இருப்பார்கள் என்பதும் பெற்றோர்களுக்குத் தெரியும். அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் அவர்களை எச்சரித்து உணர்த்துவது அவர்களுடைய கடமை. இளங்குஞ்சுகளோடு இருக்கிற தாய்க்கோழியைப் பார்த்திருப்பீர்கள். அந்த தாய்க்கோழி தன் குஞ்சுகளுக்கு வரும் ஆபத்துக்களை உணர்த்திக் கொண்டே இருக்கும். அதே போன்று தாய்மார்கள் தங்கள் வசம் கடவுள் ஒப்படைத்திருக்கிற குழந்தைகளை எச்சரித்து புத்தி சொல்ல வேண்டும். நவீன காலத்தில் வாலிபப் பிள்ளைகளுக்கு எதிர்வரும் சோதனைகள் சொல்லில் அடங்கா. அவைகளில் ஒரு சில முக்கியமான அபாயங்களை இங்கு குறிப்பிடுவோம். உலகியலில் அதிக ஈடுபாடு கொள்ளக்கூடிய தன்மை, அதாவது கடவுள் மறுப்புக் கொள்கை தேவனுக்கு கொடுக்க வேண்டிய சரியான இடத்தை தராமல் அசட்டையாயிருப்பது, கடவுளே இல்லாமல் மனிதனால் வாழ முடியும் என்று வாதிடுகிற மனோபாவம் போன்றவைகள் இளைய சமுதாயத்தைத் தாக்குகின்ற கொடிய நோய்கள். ஒவ்வொரு விளைவுக்கும் ஒரு காரணம் உண்டு. அதை எபிரேய நிருப ஆசிரியர் விளக்கும் போது ''எந்த வீடும் ஒருவனால் உண்டாக்கப்படும் எல்லாவற்றையும் உண்டு பண்ணினவர் தேவன்'' (எபி 3 : 4) இங்கே காரணம்-விளைவு என்ற கொள்கை விளக்கப்படுகிறது. கடவுள் மறுப்புக் கொள்கைகாரர்கள் உலகம் தற்செயலாய் உண்டானது என்று நம்மை நம்ப வைக்க முயற்சிக்கிறார்கள். அதை நாம் எதிர்க்க வேண்டும். ஏனெனில் தவறான போதனையானது நம் இருதயத்தில் நாம் கடவுளுக்கு வைத்திருக்கிற சிறப்பு இடத்தை அகற்றிப் போடும்.

**கருத்தடை !**

உலகத்தில் நாளுக்கு நாள் பெருகி வருகிற ஆபாசநிர்வாணக் காட்சிகளும், அரசியல்வாதிகள் கருத்தடைக்கு ஆதரவாக வரிந்து கட்டிக் கொண்டு பேசுவதையும் வீதிகளிலும் வீடுகளிலும் பொது இடங்களிலும் அதைப் பற்றிய பிரசங்கங்களைக் கேட்டும் பார்த்தும் பழகின பிள்ளைகளுக்கு கருத்தடை என்பது நியாயமான காரியந்தான் என்ற எண்ணம் படிந்து விடுகிறது. அவர்களுக்கு, இன்னும் பிறக்காமல் கர்ப்பத்தில் இருக்கிற குழந்தையைக் கொல்வது பாவமல்ல; பிறந்த பிறகுதான் கொல்லக் கூடாது என்ற கருத்து ஆழமாகப் பதிந்து விடுகிறது. இந்த தீமைபயக்கும் சிந்தனையின்

விளைவால் அநேக இளம் பெண்கள் திருமணம் செய்து கொள்வதற்கு முன்பே தைரியமாக உடலுறவில் ஈடுபட்டு கருத்தடைக்கு தங்களை ஆட்படுத்திக்கொண்டு கெட்டுப் போய்க் கொண்டிருக்கிறார்கள். பெற்றோர்கள் இதைக் குறித்து உஷாராக இருக்க வேண்டும்.

**கெட்ட வார்த்தைகள் :**

தெருக்களிலும் பொது இடங்களிலும் மோசமான மக்களைச் சந்திக்க நேரிடுகிற பிள்ளைகளுக்கு கெட்ட கெட்ட பேச்சுக்கள் அவர்கள் விரும்புகிறார்களோ இல்லையோ காதுகளில் விழுகின்றன. அறியாமையும் பாமரத் தன்மையும் அநாகரீகமும் உள்ள மக்களின் பேச்சுகளில் கடவுளைப் பற்றியோ கண்ணியமான பேச்சு வார்த்தைகளோ வாயில் வராது. எதற்கெடுத்தாலும் கெட்டவார்த்தை, தூஷணமான பேச்சுக்கள் தான். ஆனால் வேதாகமம்: **"கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம். பக்தி விருத்திக் கேதுவான நல்ல வார்த்தைகள் உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்"** (எபே 4:29) என்று அறிவுறுத்துகிறது. நம்முடைய பிள்ளைகள் எந்த விதமான மொழிகளைப் பேசவேண்டும் என்று எதிர் பார்க்கிறீர்கள்? பெற்றோர்கள் தங்கள் பொறுப்பை நன்முறையில் உணர்ந்து பிள்ளைகளின் ஒவ்வொரு நடவடிக்கையையும் கவனித்து அவர்களுக்கு நற்போதனைகளையும் நல்ல பழக்க வழக்கங்களையும் கற்றுத்தர வேண்டும். அப்பொழுதுதான் சபையும் நாடும் கர்த்தருக்கு பயந்து, தேவ ஆசீர் வாதத்தைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்படும்.

**பெட்டி பர்ட்டன் சோட்**

---

**பெற்றோரின் கடமை**

நீ உன் மகனைத் தண்டியாதிருந்தால் அவனை நேசிக்கவில்லை. நீ அவனை நேசித்தால் அவனைத் தண்டித்துத் திருத்துவாய். நீதிமொழிகள் 13:24

உன் மகன் இளவயதுள்ளவனாயிருக்கும் போது அவனுக்கு ஒழுங்கைக் கற்றுக்கொடு. நீ அப்படிச் செய்யவில்லை என்றால், அவன் அழிந்து போவதற்குக் காரணமாயிருப்பாய்.
நீதிமொழிகள் 19:18

பிள்ளையின் மனதில் மூடத்தனம் இருக்கும். சிட்சையின் பிரம்பு அதை அவனை விட்டு அகற்றும். நீதிமொழிகள் 22:15

பிள்ளையைத் தண்டியாமல் விடாதே. அவனைப் பிரம்பினால் அடித்தால் சாகமாட்டான். நீ பிரம்பினால் அவனை அடித்தால் பாதாளத்திற்கு அவன் உயிரைத் தப்புவிப்பாய்.
நீதிமொழிகள் 23:13:15

---

# இரட்சிக்கப்படுவதற்கு ஒருவன் என்ன செய்ய வேண்டும்?

அ) ஒருவன் சுவிசேஷத்தைக் கேட்டு விசுவாசிக்க வேண்டும் (அப்3:22,23; 27,28; ரோமர் 10:17) அதாவது கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்க வேண்டும் (மாற்கு 16:15,16; அப் 16:31)

ஆ) ஒருவன் தான் செய்த பாவங்களுக்காக மனஸ்தாபப் பட வேண்டும், மனந்திரும்பவேண்டும். லூக் 13:3,5; அப் 2:38; 17:30.

இ) ஒருவன் இயேசு கிறிஸ்துவைக் கர்த்தர் என்று அறிக்கையிட வேண்டும் ரோமர் 10:9,10; அப் 8:37 1 தீமோ 6:12)

ஈ) ஒருவன் திருமுழுக்குப் பெற்றுக் கொள்ள வேண்டும். (மாற்கு 16:16; மத் 28:18-20)

**மேற்சொன்னவைகளை வேதாகமத்தின்படி எப்படிச் செய்யவேண்டும் ?**

அ) ஒருவன கேள்விப்படவேண்டும். எதை, எப்படி? சுவிசேஷத்தை (ரோமர் 10:17) தன் காதுகளாலே கேட்கவேண்டும் (வெளி 2:7)

ஆ) ஒருவன் விசுவாசிக்க வேண்டும், எப்படி?
ஒருவன் தன் இருதயத்திலே விசுவாசிக்க வேண்டும்.

இ) ஒருவன் மனம் திரும்ப வேண்டும் எப்படி?

1. நினிவே பட்டணத்தார் மனந்திரும்பினார்கள். (லூக் 11:32). அவர்கள் யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டு தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினார்கள் (யோனா 3:16

2. கெட்ட குமாரன் மனந்திரும்பினான் (லூக்15:17-20) ''எழுந்து புறப்பட்டு தன் தகப்பனிடத்தில் வந்தான்''.

3. மனந்திரும்புதல் என்பது துக்கப்படுவதோடு நின்று விடுவதல்ல (2 கொரி 7:10) மனந்திரும்புதல் என்பது வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்வதும் அல்ல; அதைத் தொடர்ந்து மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளைக் கொடுக்க வேண்டும். (லூக் 3:8) மனந்திரும்புதல் என்பது தவறான காரியங்கள் செய்வதை நிறுத்தி விட்டு சரியான பாதையில் நடைபோடுதல் ஆகும்.

ஈ. ஒருவன் அறிக்கையிடவேண்டும், எப்படி?

அறிக்கை வாயினாலே செய்யப்படுகிறது. (ரோமர் 10;9,10) ஒருவன் தான் கண்ட கனவையோ, கண்டதாக நினைத்துக் கொண்டிருக்கிற தரிசனத்தையோ தான் செய்த பாவங்களைத் தனி அறையில் சாமியாரிடமோ, பாஸ்டரிடமோ, அல்ல. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்ய வேண்டும். (அப் 8;37; மத் 10;32)

உ. ஒருவன் திருமுழுக்குப் பெற்றுக் கொள்ள வேண்டும் எப்படி?

(1) பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் பெயரால் — பிறந்த பச்சிளம் குழந்தைக்கு நல்லது கெட்டது தெரியாத, சொன்னதை புரிந்து கொள்ளவும் விசுவாசிக்கவும் இயலாத பருவத்தில் — தலை மேல் மூன்று முறை தண்ணீர் தெளித்தல்ல.

(2) தண்ணீரில் மூழ்கி பின்னர் எழுந்திருக்கும் வகையில் (ரோமர் 6;4; கொலோ 2:12)

என்ன ஐயா, ரொம்பவே பயப்படுத்துகிறீர்? இவ்வளவு காரியங்கள் அவசியம் தானா? என்று யோசிக்காதீர்கள். நண்பர்களே; சகோதரிகளே! உலகத்தில் அற்பமான காரியங்களுக்கெல்லாம் ஆயிரத்தெட்டு ஆசாரங்கள், ஒழுங்குகள், விதிகள் என்று வைத்துக் கொள்கிறோம். அதற்கு யாரும் முகம் சுளிப்பதில்லை சதா காலமும் நிலை நிற்கக் கூடிய ஆத்தும ரட்சிப்பைக் குறித்து வேதாகமத்தில் உள்ளதை விளக்கமாக எடுத்துச் சொன்னால் சங்கடப்பட்டுக் கொள்கிறீர்களே, கொஞ்சம் பொறுமையாயிருங்கள் ஏன், எதற்காக அப்படியெல்லாம் செய்ய வேண்டும் என்று சொல்லுகிறேன்.

அ) ஏன் ஒருவன் விசுவாசிக்க வேண்டும்?

பாவங்களில் சாகாதபடிக்கு (யோவான் 8:21,24; மாற்கு 16:16)

ஆ) ஏன் ஒருவன் மனந்திரும்ப வேண்டும்?

ஏனெனில் மனந்திரும்பு இல்லாவிட்டால் மடிந்து போவாய் என்று வேதம் எச்சரிக்கிறது. (லூக் 13:35,; அப் 17:30; 2 பேதுரு 3:9)

இ) ஏன் கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்ய வேண்டும்?

மாம்சத்தில் வந்த இயேசுதான் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட மேசியா என்று விசுவாசிப்பது இரட்சிப்புக்கு அவசியம் (ரோமர் 10:9,10).

ஈ) ஏன் ஒருவன் திருமுழுக்குப் பெற்றுக் கொள்ள வேண்டும்? பாவ மன்னிப்புப் பெற்றுக் கொள்வதற்காக (மாற்கு 16:16; அப் 2:38; 22:16; 1 பேதுரு 3:21)

## இரட்சிப்பின் திட்டத்தில் தேவனுடைய பங்கு என்ன?

அ) ஒருவன் சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படியும் போது தேவன் அவனுடைய பாவங்களை மன்னிக்கிறதாக வாக்களித்துள்ளார். அப் 2:38; மாற்கு 16:16.

ஆ) இரட்சிக்கப்பட்டவர்களை தமது சபையில் சேர்த்துக்கொள்கிறார் அப் 2:47 (இது கர்த்தருடைய சபை என்று அழைக்கப்படுவதால் இதுவே வேதாகமம் கூறுகிற ஒரே சபை. சபையில் அங்கமாவதற்கு தனியாக விதிகள் கிடையாது. ஒருவன் இரட்சிக்கப்படுவதற்கு என்னென்ன நிபந்தனைகள் சொல்லப்பட்டிருக்கிறதோ அதுவே சபையில் அங்கம் ஆவதற்கும் உள்ள நிபந்தனைகள். இரட்சிக்கப்பட்டாயிற்று இன்னும் அங்கமாகவில்லை என்பது அபத்தம். அப்போஸ்தலருடைய உபதேசத்தில் நீங்கள் முதலில் இரட்சிப்படையுங்கள். அப்புறம் உங்களுக்குப் பிரியமான சபையில் சேர்ந்து கொள்ளுங்கள் என்று ஒரு இடத்திலும் சொல்லப்படவில்லை, சுவிஷேத்துக்குக் கீழ்ப்படிந்து இரட்சிக்கப்பட்டவர்கள் எல்லாம் சரீரமாகிய ஒரே சபையில் தான் அங்கமானார்கள்.

இரட்சிக்கப் பட்டவர்கள் எல்லாம் கிறிஸ்தவர்கள் என்ற குடும்பப் பெயரைத் தரித்துக் கொண்டார்கள் (அப்11:26; 26:28; 1 பேது 4:16) RC, லுத்தரன், மெதாடிஸ்ட், CSI என்று முன்னாலேயும் பின்னாலேயும் எதையும் சேர்த்து தங்கள் வேற்றுமையை வெளிப்படுத்தவில்லை.

ஒரு ஊரிலோ, பட்டணத்தின் ஒரு பகுதியிலோ இரட்சிக்கப்பட்டவர்கள் எல்லாம் ஒரு இடத்தில் கூடி ஆராதித்தார்கள். அவைகள் கிறிஸ்துவின் சபை என்று மட்டுமே அழைக்கப்பட்டன (அப் 2;42; 20:7;1 கொரி 16:2 எபே 5;19; ரோமர் 16:16) (ஊரின் பேராலும், நாளின் பெயராலும், மனிதர்கள் பெயராலும் அல்ல)

தேவன் சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிந்தவர்களுக்காக நித்திய ஜீவனை வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். (1 யோவான் 2:25; ரோமர் 6:22,23) இது ஒரு நிபந்தனையோடு கூடிய வாக்குத்தத்தம் (வெளி 2:10)

## C. பாவிகள் வஞ்சிக்கப்பட ஏதுவுண்டு

தேவன் பாவ மன்னிப்பு சம்பந்தமாக இவ்வளவு தெளிவான காரியங்களையும், நிபந்தனைகளையும் சொல்லியிருந்த

போதிலும், சில சுயநலமிகள் தாங்கள் கர்த்தரைக் காட்டிலும் வல்லமையுள்ளவர்கள் என்ற நினைப்பில் தேவனுடைய அநந்த ஞானத்தால் உருவாக்கித் தந்த உபதேசச் சட்டங்களை மாற்றி-யும், கூட்டியும், குறைத்தும், திரித்தும் சில தவறான போதனை-களை மக்கள் மத்தியிலே பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். அவை-களில் சில : நீ எந்த நிமிஷத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை உன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டாயோ அந்நேரமே நீ இரட்சிக்கப்பட்டு விட்டாய். ஆகையால் நீ, கிறிஸ்துவை என் சொந்த இரட்சகராகஏற்றுக்கொள்கிறேன் என்று நினைத்துக்கொள் அது போதும் என்று போதித்து, பாவிகள் கர்த்தருடைய ஆலோ-சனைகளைக் கைக்கொள்ளாமல் தங்கள் மாமிசமும் மனசும் விரும்பியபடி ஜீவித்துக் கொண்டே மோட்சம் போய் விடலாம் என்று ஆசை காட்டி மோசம் செய்து ஏதோ இவர்கள் தான் இரட்சிப்பின் மொத்த ஏஜெண்டுகள் மாதிரி நடித்து, கணிசமான காணிக்கையைக் கையூட்டாகப் பெற்றுக் கொண்டு சுகபோகத்தில் உழல்கிறார்கள், ''தாங்களே கேட்டுக்கு அடிமைகளாருந்தும் மற்ற வர்களுக்கு சுயதீனத்தை வாக்குத் தத்தம் பண்ணுகிறார்கள்'' என்று நன்றாய்த் தான் இவர்களைத் தோலுரித்துக் காட்டியிருக்-கிறார் பேதுரு (2பேது 2:19)

அவர்கள் செய்கிற ஆர்ப்பாட்டங்கள், கூச்சல்களைக் கேட்பவர் களும் பார்ப்பவர்களும் அவருக்குள் ஏதோ ஒன்று கிரியை செய்யத் தான் செய்கிறது என்று எண்ணி ஏமாந்து போகின்றனர். ஆனால் பரிதாபம்! இதில் வருத்தப்பட வேண்டிய அம்சம் என்ன வென்றால் நேர்மையான, உண்மையுள்ள சில சான்றோர்களும் இவ்விதமான பொய் போதகங்களைக் கேட்டு நாங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டோம் என்று ஏமாந்து நிற்கிறார்கள் ஒருவனுடைய இரட்சிப்பு பற்றிய உணர்வுகள் வேதாகம போதனைகளுக்குப் புறம்பானதாக இருக்கு-மானால் அது பொய்யை விசுவாசத்தினால் ஏற்பட்ட உணர்வே யல்லாமல் வேறல்ல (2தெச 2:11,12) உஷார்!

E.Z.S

---

## அநியாயமாய் ஐசுவரியத்தைச் சேர்க்கிறவன் கதி

**அநியாயமாய் ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறவன் முட்டையிட்டு, அவயங்காத்தும், குஞ்சு பொரிக்காமற்போகிற கவுதாரிக்குச் சமானமாயிருக்கிறான். அவன் தன் பாதி வயதிலே அதை விட்டு தன் முடிவிலே மூடனாயிருப்பான். எரே 17:11**

# சான்றாண்மைக்குரிய நல்லியல்புகள் இல்லாமல் நல்லது செய்வது எப்படி?

கிறிஸ்தவர்கள் என்ற முறையில் நாம் நற்செயல்கள் புரிய வேண்டும் என்று வேதாகமம் நம்மை ஊக்குவிக்கிறது (எபே 2:10) அப்படிச் செய்யும்போது நாம் தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் செய்வது சிறப்பு.

இயலாதவர்கள், நலிந்தவர்கள் என்று எண்ணிக் கொண்டு யாருக்கு நாம் உதவி செய்கிறோமோ அவர்கள் ஏதோ ஒரு சில காரியங்களில் தான் சராசரி மக்களைவிடக் குறைவுள்ளவர்களே தவிர மற்றபடி அவர்களும் நம்மைப் போன்றவர்கள் தான் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். எனவே நாம் செய்கிற உதவிகளுக்கு நன்றியையும், செய்கிற நல்ல காரியங்களுக்குப் பாராட்டையும் பெறுவதற்கு நமக்கு உரிமை உண்டு என்ற எண்ணம் கூடாது.

சமுதாயம் நம்முடைய சேவையின் மேன்மையைப் புரிந்து கொண்டு நம்மைப் புகழ்ந்து பாராட்டும் என்ற நோக்கத்துடன் நற்காரியங்களைச் செய்யக் கூடாது. நற்கிரியைகளை அதன் சரியான நோக்கத்தோடு செய்வதே ஒரு வெகுமதிதானே! நல்ல காரியங்களைச் செய்வதினால் மனதுக்குத் திருப்தி ஏற்படுகிறது அல்லது ஒரு மகிழ்ச்சியான அனுபவம் பெறலாம் என்று எதிர்பார்ப்பதும் கூடாது. அப்படி எதிர்பார்த்தால் சீக்கிரமே நீங்கள் சோர்வடைந்து விடுவீர்கள். அநேக மக்கள் நற்காரியங்களை நல்ல எண்ணத்துடன் தான் தொடங்குகிறார்கள். ஆனால் அவைகள் தாங்கள் எதிர்பார்த்ததை விட கடினமாகவும், அதனால் பிரச்சனைகள் உருவாகிறது என்று தெரிந்தாலும், அவைகளுக்கு மற்றவர்கள் ஒத்துழைப்புத் தர முன்வரவில்லை என்ற நிலை வரும் போதும் அல்லது யாருக்கு நாம் உதவி செய்கிறோமோ அவர்களிடமிருந்து நமக்கு சரியான பாராட்டோ நன்றியறிதலோ இல்லாத போதும் அல்லது செய்யச் செய்ய இன்னும் நம் கையையே எதிர்பார்த்துக் கொண்டும் இருந்தாலோ எரிச்சலடைந்து விட்டு விடுகிறார்கள் (மத் 5,43-47) நாம் உதவுகிற மக்கள் நலிந்தவர்களாக இருந்தபோதிலும் இதர விஷயங்களில் மற்றவர்களைப் போலவே அவர்களுடைய இயல்புகளும் இருப்பதால் அந்த சூழ்நிலையில் வாழ்கிற மற்றவர்கள் எப்படிப்பட்ட உணர்வுகளுடன் இருப்பார்களோ அதே நிலையில்தான் அவர்களும் இருப்பார்கள். அவர்களிலும் நல்லவர்கள், வக்கிர புத்தியுள்ளவர்கள், மரியாதை

தெரியாதவர்கள், இங்கித மற்றவர்கள், முரட்டு சுபாவம் உள்ளவர்கள், மிருதுவானவர்கள், மிருகத் தன்மையுள்ளவர்கள், கூச்ச சுபாவமுள்ளவர்கள், அமளி பண்ணுகிறவர்கள், எதையும் கண்டு கொள்ளாதவர்கள் போன்றவர்கள் இருக்கவே செய்கிறார்கள்.

நீங்களும் நலிந்தவர்களில் ஒருவர் என்ற நினைப்பில் அவர்கள் பிரச்சனைகளுக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு அவர்கள் சார்பாக வாதாட முற்படாதீர்கள். எங்களுக்கு உன்னைத் தலைவனாக்கியது யார் என்று முணுமுணுப்பில் தொடங்கி, பின்னர் போர்க்கொடி உயர்த்தி உன் தலைமைத் தனத்தைப் பறித்துக் கொள்ளும் நிலை வந்து விடும். நீர் நினைக்கிறபடி இல்லாமல் அந்த நலிந்த மக்களுக்கே எல்லாம் தெரியும். உம்முடைய சேவை தேவை என்று அவர்களாகக் கேட்கும் வரை பொருத்திருந்து, பின்னர் செயல்படும் பொழுது அதற்கு நல்ல வரவேற்பு இருக்கும்.

நலிந்த மக்களுக்கு என்னென்ன தேவைகள் என்று நீங்களாகப் பட்டியல் போட்டுக் கொண்டு நிற்காதீர்கள். அவர்களுடைய தேவைகள் என்ன என்று சம்பந்தப்பட்டவர்களையே விசாரித்து அறிந்து கொண்டு உங்களுக்கு எந்தெந்த விஷயங்களில் உதவ முடியுமோ அந்தந்த வகையில் உதவி செய்யுங்கள். அவர்களுக்குப் பயன் தரும் என்று நீங்கள் கருதுகிற காரியங்களை அவர்களுடைய சம்மதத்தின் பேரில் செய்யுங்கள் அவர்களுக்காக நீங்களே முடிவெடுக்காதீர்கள் (மத் 7:12)

நீங்கள் ஒரு நல்ல காரியத்தைச் செய்யத் தொடங்குமுன் நினைப்பதையும், சொல்வதையும் செயல்முறைக்குக் கொண்டுவரமுடியுமா என்று ஒருமுறைக்கு இருமுறை சிந்தித்துப் பார்த்துபின்னர் தொடங்குங்கள் (லூக் 14 ; 28-35) வேறு யாராவது ஒரு காரியத்தைத் தொடங்கிச் செய்து கொண்டிருந்தால் அதில் எவ்வளவு பிரச்சனைகள் இருந்தாலும் அதில் தலையிடாதீர்கள். அவர்களே அதைச் சரி செய்து கொள்ளட்டும். வாக்குறுதி கொடுப்பதில் கவனம் தேவை. நீங்கள் சொல்வதைச் செய்ய முடியும் என்றால் மட்டும் வாக்குக் கொடுங்கள் (லூக் 9:62) நற்செயல்களில் ஆர்வமுள்ள ஒரு இனமாகக் கிறிஸ்தவர்கள் இருக்க வேண்டும் என்ற ஓர் பெரு நோக்கோடு தான் நாம் மீட்கப்பட்டிருக்கிறோம். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் எண்ணம் நிறைவேறும்படி, நாம், கனியற்றவர்களாக இராமல், பிறர் குறைகளை நீக்கும் வண்ணம் நற்காரியங்களைச் செய்யப் பழகுவோமாக!

தீத்து 2:14; 3:14.

**S. ஏசையன்**

# உன்னை நீயே எண்ணிப்பார் !

தேவனால் படைக்கப்பட்ட எல்லா உயிரினங்களைக்காட்டிலும் மனிதனே மிகச் சிறந்தவன். அவனை படைப்பின் சிகரம் என்றே கூறலாம். ஏனெனில் அவன் தேவ சாயலிலே படைக்கப்பட்டவன். அவனைப் படைக்கும் போது வேறு எந்தப் படைப்புக்கும் செல விட்டிராத சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது. அண்ட சரா-சரங்கள் அனைத்தையும் வாய்ச் சொல்லால் படைத்தவர், மனிதனை மட்டும் பூமியின் மண்ணிணாலே உருவாக்கி ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதி, அவனை ஜீவாத்துமாக்கினார். (ஆதி 2:7) மேலும் படைக்கப்பட்ட அனைத்து உயிர்களையும் ஆண்டு அனுபவிக்கும் அதிகாரத்தையும் அவனுக்குக் கொடுத்தார். (ஆதி 1:26-28)

ஆனால், ஆதி மனிதன் இந்த உண்மைகளை தெரிந்தோ, தெரியாமலோ அசட்டை செய்து, தடம் மாறிக் கெட்டு போனான். தனக்கு தேவனால் கொடுக்கப்பட்ட சிறப்பு நிலையை எண்ணிப் பார்க்கத் தவறியதால், மனிதனுக்கு ஏற்பட்டிருக்கிற இழப்பை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை. இப்பொழுதும் கூட மனிதன் விரும்பினால் தேவ சாயலில் வளர்ந்து ஆசீர்வாதத்தின் உச்சிக்குப் போகலாம். அல்லது பாவத்தின் பலனாகிய படு பாதாளத்தை அடையலாம். இந்த பேருண்மையை உணர்ந்து கொள்ளாமல் மனித இனம் இன்றைக்கு அழிவை நோக்கி விரைந்து சென்று கொண்டிருக்கிறது. இந்த பரிதாப நிலையை அவனுக்கு எடுத்துக் கூற எவ்வளவு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் அது அதிகமில்லை.

ஆனால் நிலைமை என்ன? வரவர மனித இனம் தன்மேன்மையையும் சிறப்பு நிலையையும் பற்றிய மதிப்பீட்டில் தொடர்ந்து தவறுகள் செய்வதாகவே தெரிகிறது. ஒருபுறம், மனிதனுடைய ஆற்றலையும் வேலை செய்யும் திறனையும், பெருகி வரும் இயந்திர சாதனங்களோடு ஒப்பிட்டுப் பார்த்து, மனிதனின் மதிப்பையும், முக்கியத்துவத்தையும் எடைபோடுகிறார்கள். ஒரு சிறந்த அறிவியல் நூலை பழைய பேப்பர்காரனிடம் போட்டால் அவன் அதன் உயர்வை அறிய மாட்டான். எடைக்குரிய காசுதான் கொடுப்பான். அது போன்றுதான் இதுவும்.

மற்றொருபுறம் வளர்ந்து வரும் விஞ்ஞான அறிவினால் ஏற்படும் கண்டு பிடிப்புகள், சாதனைகள் ஆகியவைகளை மனதில் கொண்டு, 'மனிதனால் முடியாத காரியம் ஒன்றுமே இல்லை என்று இறுமாந்து, கடவுளே இல்லை. அதைப் பற்றிய சிந்தனையெல்லாம் வீணர்களின் பொழுது போக்கு, மனிதன் தன் அறிவைப் பயன்

படுத்தி மண்ணுலகை விண்ணுலகு ஆக்கலாம். மகிழ்ச்சியையும், சமாதானத்தையும் நிலை நாட்டலாம்' என்று பேசி, மனிதன்மேல் தேவைக்கும் அதிகமான நம்பிக்கை வைத்து அவனை கடவுள் ஸ்தானத்துக்கு உயர்த்தி விடுகிறார்கள். ஆனால் ஆழ்ந்து சிந்தித்துப் பார்ப்பவர்களுக்கு மேற்சொன்ன இரண்டு சிந்தனை யோட்டங்களுமே அபாயகரமானவை; உண்மைக்கு புறம்பானவை என்பது விளங்கும்.

அப்படியானால் மனிதனுடைய உண்மை நிலைதான் என்ன? என்ற கேள்வி எழுவது நியாயமே. ஒரு பொருளை உருவாக்கியவருக்குத்தான் அதனுடைய உண்மையான மதிப்பும் உயர்வும் மிக நன்றாகத் தெரியும். ஆகவே மனிதனைப் படைத்துப் பராமரித்துப் பாதுகாத்து வருகிறவர், மனிதனின் உண்மையான தன்மையையும் நிலையையும் பற்றி என்ன கூறுகிறார் என்று கீழ் வரும் தேவனுடைய வார்த்தைகளை வாசித்துச் சிந்திப்போம்.

மனிதனுடைய உண்மையான நிலையை விளக்குவதற்கும், அவனுக்கு நம்பிக்கை ஊட்டி அவனை உற்சாகப் படுத்துவதற்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இந்த பூலோகத்தில் சஞ்சரித்த நாட்களில் இரண்டு முறைகளைப் பயன்படுத்தினார். ஒன்று உபதேசம்: தனக்குக் கிடைத்த வாய்ப்பு அனைத்தையும், மாந்தருக்கும் படைத்தவராகிய தேவனுக்கும் உள்ள உறவின் இரகசியத்தை எளிய உவமைகளைக் கொண்டு பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் விளக்கிக் கூறினார். தான் சொல்லுகிற அனைத்தும் உண்மை என்பதை மக்கள் நம்ப வேண்டும் என்பதற்காக மனிதனால் செய்ய முடியாத பலவித அற்புத அடையாளங்களையும், பலத்த செய்கைகளையும் செய்து உறுதிப்படுத்தினார்: (யோவான் 20:30:31)

இன்னொன்று : மனிதர்கள் பாவம் செய்யாமல் வாழ முடியும் அப்படிப்பட்ட வாழ்க்கை முறையால்தான் தேவனைப் பிரியப்படுத்த முடியும் என்று அவருடைய தூய்மையான வாழ்க்கை மூலம் வழி காட்டினார்.

மேலும் கிறிஸ்து மனுக் குலத்தின் மீது அபிரிதமான அன்பு காட்டினார். மத் 93:6; 14:14: மாற்கு 1.41 ஆகிய வசனங்கள் இயேசு கிறிஸ்து மன உருக்கமும், ஏழை எளிய மக்கள் மீது பரிவும் பாசமும் கொண்டவர் என்பதைத் தெளிவாக்குகிறது. அந்நாட்களில் வாழ்ந்த மதத் தலைவர்கள் மக்களை வஞ்சித்து, தங்களுடைய வாழ்க்கை வசதிக்காக, சுய நலத்துக்காக பாமர மக்களைப் பலிக்கடாக்களாக்கி, சொகுசு வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். 'ஊருக்குத்தான் உபதேசம்; உனக்கு இல்லையடி' என்ற பாணியில்

தாங்கள் உபதேசிக்கிறதை அவர்கள் கடைபிடிக்காமல் போலித்-தனமான வாழ்ந்து கொண்டிருந்தனர். (மத் 22: 1-2)

மனிதனுடைய உண்மையான மதிப்பை அறிந்திருந்த இயேசு-வுக்கு, இது மிகுந்த மனவேதனையை தந்தது. வாழ்க்கைப் பெருஞ்-சுமையால் தள்ளாடி, கூனிக் குருகிப் போய் புழுவாய் நெளிந்து கொண்டிருந்த மக்களையும், நோய் நொடிகளால் பாதிக்கப்பட்டு துன்பத்தில் உழன்று கொண்டிருந்த மக்களையும் அவர் பார்த்த பொழுது, அவர்கள் மீது இரக்கம் கொண்டு, அவர்கள் கண்ணீ-ரைத் துடைத்து, ஆறுதல்கூறி அரவணைத்துக் கொண்டார். அவர்-களையும் தேவன் நேசிக்கிறார் என்பதை அவர்களுக்கு உணர்த்த பல விதத்திலும் முயன்றார்.

உலகத்தில் அற்பமாக எண்ணப்படுகிற பறவை இனங்களில் அடைக்கலான் குருவியும் ஒன்று. அப்படிப்பட்ட எளிய உயிர்கள் கூட ஆண்டவருடைய பராமரிப்புக்குத் தப்புவதில்லை. அப்படியி-ருக்கும் போது அவருடைய படைப்பின் சிகரமான மனிதனைப் பற்றி அக்கரைப்படமாட்டார் என்று நினைத்து, நம்பிக்கை இழந்து சோர்ந்து போவது எவ்வளவு அறியாமை! மனிதனுடைய உயிர் இருக்கட்டும், அவனுடைய முடிகளில் ஒன்றுகூட அவருடைய உத்-தரவு இல்லாமல் கீழே விழாது. ஆகவே மனிதனின் சிறப்பு நிலை-யைக் குலைத்துப் போடும் எந்த இழி செயலுக்கும் ஆளாகக் கூடாது. அதற்கு விலையாகஉன் உடலையே அர்ப்பணிக்க நேர்ந்-தாலும் அஞ்சக்கூடாது என்று தைரியம் கொடுக்கிறார்.(லூக்12:4-7)

மனிதன் உடைக்காகவும் உணவுக்காகவும் படும் பிரயாசமும், அணுதும் முறையும் தேவையில்லாதது. காலையில் பூத்து, மாலையில் வாடிப் போகும் மலர்கள் காடுகளிலும், மலைகளிலும் யாருடைய பாதுகாப்பும் பராமரிப்பும் இன்றி, கண்ணைக் கவரும் வண்ணங்-களில் ஜொலிக்கின்றன. மிகவும் ஆடம்பரப் பிரியரும், வசதிகள் பல படைத்தவருமாகிய சாலமோன் என்னும் அரசனே கூட அவ்வித வண்ணக் கலவை ஆடைகளை அணிந்திருக்க மாட்டான். அப்படி-யிருக்கும் போது தான் படைத்தவற்றில் சிறந்தவனாகிய மனிதனுக்கு ஏன் செய்யமாட்டார்? அதேபோல் உணவு சம்பந்தப்பட்ட விஷயத்-திலும் பறவைகளை ஒப்பிட்டுக் காட்டினார். அவைகள் விதைப்பதும் இல்லை. அறுக்கிறதும் இல்லை. களஞ்சியங்களில் சேர்த்து வைப்-பதும் இல்லை. ஆனால் எங்காவது பறவையினம் பட்டினியால் மாண்டு போயிற்று என்ற செய்தி கேள்விப் பட்டிருக்கிறீர்களா? அப்படியிருக்க, மனிதன் உடைக்காகவும், உணவுக்காகவும் தன் ஆத்துமாவை அடகு வைத்து நீதி, நேர்மை, அன்பு, இரக்கம்

ஆகிய நற்பண்புகளை விற்று, அழிந்து போகிற இந்த உடலைப் பேண வேண்டுமா? என்று கேட்டுச் சிந்திக்கத் தூண்டுகிறார்.

தேவன் வகுத்துத் தந்திருக்கிற பிரமாணங்களில் கூறப்பட்டுள்ள நியமங்களைக் கடைப் பிடித்து வாழ்; அப்பொழுது நீ விரும்புகிற அனைத்தையும் தருவார் என்று ஆன்மாவுக்கும், இறை வழிபாட்டுக்கும் கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தை உணர்த்துகிறார். (மத் 6:22-33)

பாதை தடுமாறி எங்கே போய்க் கொண்டிருக்கிறோம் என்பதே தெரியாமல் அழிவை நோக்கித் துரித பயணம் போய்க் கொண்டிருக்கும் மனுக்குலத்தின் மீது தேவன் எவ்வளவு கரிசனை உள்ளவராக இருக்கிறார் என்பதை விளக்க ஒரே அதிகாரத்தில் மூன்று உவமைகளைக் கூறி விளக்குகிறார். காணாமற் போன ஆடு, காணமாற் போன வெள்ளிக் காசு, காணாமற் போன மகன் ஆகிய மூன்று உவமைகளிலும், ஒரே ஒரு பாவியின் மனம் திரும்புதல் பரலோகத்தில் எவ்வளவு மகிழ்ச்சிக்குரிய காரியம் என்பதைவிளக்கி, தேவன் மானிடர் மேல் கொண்டுள்ள அளவற்ற அன்பைச் சுட்டிக் காட்டுகிறார். (லூக் 15)

பெரும்பான்மையான மனிதர்களுக்கு, தாங்கள் சரீரமும், ஆன்மாவும் உடைய சிறப்பு ஜீவன்கள் என்கிற காரியம் விளங்குவதில்லை. விளங்கினாலும் அதைஅவ்வளவு முக்கியமான விஷயமாக எடுத்துக் கொள்வதில்லை, சரீரத்தின் அழிந்துபோகிற தன்மையையும், ஆன்மாவின் நிரந்தரமான தன்மையையும் விளக்குவதற்குப் பின்வருமாறு கூறுகிறார். 'ஆத்துமாவைக் கொல்ல வல்லவராயிராமல் சரீரத்தை மாத்திரம் கொல்லுபவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம். ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்தில் அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள் (மத் 10:28) மேலும் ஆன்மாவோடு ஒப்பிடும் போது சரீரம் மிக அற்பம் ஆகவே அதனைப் பேணிக் காப்பதற்கு பெரும் பிரயாசம் எடுத்துக் கொண்டு, அதனுடைய விருப்பத்துக்கு அடிமையாகி விடக் கூடாது என்று விளக்குவதற்கு 'ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவனல்ல என்கிறார். (லூக் 12:15) ஆனால் நடைமுறை தலைகீழாக இருக்கிறது. நிலையற்றதும், அழிந்து போகக் கூடியதுமான யாக்கையைப் பேணிக் கொண்டு, என்றென்றும் நிலைத்து நிற்கிறதான ஆன்மாவை அசட்டை செய்கிறது எவ்வளவு மதியீனம்! அரிசியைக் குப்பையில் கொட்டிவிட்டு, உமியைப் பத்திரப்படுத்துகிறவனைப் பார்த்து எள்ளி நகையாடுகிறோம், ஆத்துமாவை அடகு வைப்பதற்கு நாம் வெட்கப்படுவதேயில்லை, அப்படிப்பட்

டவர்களைப் பார்த்து ''மதிகேடனே!'' என்று வேதம் விளிக்கிறது. (லூக் 12:20). மேலும் இயேசு இப்படிப்பட்டவர்களை நோக்கி ஒரு கேள்வி கேட்கிறார். ''மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்திக் கொண்டால் அவனுக்கு லாபம் என்ன? தன் ஜீவனுக்கு ஈடாக அவன் என்னத்தைக் கொடுப்பான்? (மத் 16:26)

மேற்சொன்ன காரியங்கள் அனைத்தையும் சிந்தித்துப் பார்க்கும் போது, மனிதன் தன்னைப் படைத்த கடவுளை மறந்து, புறக்கணித்து விட்டு, தன் சொந்த வழி நடந்து நிம்மதியையும், சமாதானத்தையும், மகிழ்ச்சியையும் அடையவும் நித்திய ஜீவனைப் பெறவும் இயலாது படைத்தவரை மதித்துக் கனம் பண்ணி, அவர் வகுத்துத் தந்துள்ள பிரமாணங்களைப் பற்றிக் கொண்டு அதன்படி வாழ்ந்து வந்தால், இம்மையில் சமாதானமும், மகிழ்ச்சியும் கிட்டும்; மறுமையிலும் கிறிஸ்துவோடு ஆளுகை செய்யும் பாக்கியமும், என்றென்றும் கவலையில்லாத, துன்பம் கலவாத மகிழ்ச்சியான வாழ்வும் வாழலாம் என்ற உண்மை தெளிவாகிறது.

நண்பனே, சகோதரியே! இப்பொழுது நம்முடைய தீர்மானம் என்ன? கிறிஸ்துவை நம்முடைய வாழ்க்கையின் வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டு அவருடைய உபதேசச் சட்டங்களுக்கு முழு மனதுடன் கீழ்ப்படிந்து, நீதியாகவும், நேர்மையாகவும், பண்புடனும், அன்புடனும் விசுவாசத்துடனும் வாழ்ந்து அவர் நமக்காக வைத்திருக்கும் ஆனந்த பாக்கியத்தைப் பெற்றுக் கொள்ள இன்றே உறுதி எடுத்துக் கொள்ள தேவன் நம்மை ஏவுவாராக!

E Z செல்வநாயகம்

## இதயத்து எண்ணங்கள்

நல்ல மரம் கெட்ட கனி கொடாது. கெட்ட மரம் நல்ல கனி கொடாது அந்தந்த மரம் அதினதன் கனிகளால் அறியப்படும். முட்செடிகளில் அத்திப் பழங்களைப் பறிப்பாருமில்லை. நெருஞ்சிச் செடியில் திராட்சைப்பழங்களை அறுப்பாரும் இல்லை. நல்ல இதயமாகிய பொக்கிஷத்திலிருந்து நல்ல மனிதன் நல்லதை எடுத்துக்காட்டுகிறான். பொல்லாத மனிதன் பொல்லாத இருதயமாகிய பொக்கிஷத்திலிருந்து பொல்லாததை எடுத்துக் காட்டுகிறான். இருதயத்தின் நிறைவிலிருந்து வாய் பேசும்

லூக்கா 6;43-45

# கிறிஸ்துவும் அவருடைய சபையும்

சில மனிதர்களைப்பற்றி நாம் நினைக்கும் போது, அவர்கள் தொடர்பான வேறு சில காரியங்களும் நம் நினைவிற்கு வருகின்றன. நோவாவைப்பற்றி எண்ணும்போது பேழையும் நம் நினைவில் தோன்றுகிறதல்லா? அதுபோல கிறிஸ்துவை நாம் நினைக்கும் வேளையில் அவருடைய சபையும் நினைவுக்கு வர வேண்டும். அவருடைய நெஞ்சை முற்றிலுமாக நிறைத்திருந்தது சபை என்பதில் சந்தேகமில்லை. அதுபற்றி அவர் கூறுவதை மத்தேயு 16 ம் அதிகாரம் 16 முதல் 19 வசனங்களில் நாம் காண முடிகிறது.

சபை அவருக்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது என்பதைப்பற்றி ஒரு நிமிடம் நீங்கள் சிந்தித்துப் பார்த்ததுண்டா? அவ்வாறு நீங்கள் செய்தால், அதாவது, சபையுடன் அவருக்குள்ள உறவு பற்றிக் கூறும் வசனங்களை படித்துப்பார்க்கும் போது, சபையின் பேரில் அவருக்குள்ள அக்கறையைப்பற்றி ஓரளவு புரிந்து கொள்ள உங்களால் இயலும்,

## 1. சபைக்காக அவர் செலுத்திய விலையைப் பாருங்கள்

ஒரு பொருளுக்கு ஒருவர் தரும் மதிப்பு, அதற்கு அவர் கொடுக்க விரும்பும் விலையைப் பொறுத்துள்ளது என்பதை நாம் பொதுவாகக் கூறமுடியும். அப்பொருள் மதிப்பேறப்பெற்றது என அவர் கருதினால், எவ்விலையும் அதற்குத் தர தயாராக இருப்பார். அவர் பெரிதாகக் கருதும் அப்பொருளை அடைய தியாகம் செய்யவும் தயங்க மாட்டார்.

மேற்சொன்ன உதாரணம், நமது தேவன் சபையின் பேரில் வைத்திருந்த மதிப்பை நமக்கு ஓரளவு விளக்கக்கூடும். பவுல் கூறியதைக் கேளுங்கள், "புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள். அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து.... தம்மைத்தாமே அதற்கு ஒப்புக் கொடுத்தார்" (எபே.5:25,27) எபேசு பட்டணத்து மூப்பர்களை நோக்கி பின்னொரு வேளையில் அவர் பேசும் போது, "....தேவன் தம்முடைய சுய ரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை...." (அப் 20:28) என்பதாகக் கூறினார். காசு பெறாத காரியத்திற்காக எவரும் இத்தகைய விலையைக் கொடுக்க மாட்டார்கள் என்பது திண்

ணம், சபைக்காக மிகப் பெரிய ஒரு முதலீட்டை இயேசு செய்தார். ஆம், அவரிடமுள்ள சகலமும் அதற்கு விலையாகப் போயிற்று.

சபையைப்பற்றிய தேவனின் மதிப்பீட்டைக் குறித்து நாம் சிறிதும் சந்தேகிக்கத் தேவையில்லை. தனது இரத்தமும், உயிரும் அதற்கு ஈடானது என அவர் கண்டார். மிக உயர்ந்த தியாகத்தை சபைக்காகச் செய்ய அவர் தயாரானார். இச் செயல் சபையின் ஒப்பற்ற மகத்துவத்வை, நாம் எவ்விதத்திலும் குறைத்து மதிப்பிடாமல் உணர வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்திற்று.

## 2. சபைக்காக அவருடைய ஜெபத்தைக் கவனியுங்கள்

யோவான் 17ம் அதிகாரத்தில் காணப்படும் அந்த மகத்தான ஜெபத்தைப் படித்துப் பார்க்கும் போது, சபை பற்றி தேவனுடைய உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் நாம் பார்க்க முடிகிறது. அந்த சீடர்கள் அவருடைய நினைவை நிறைத்து நின்றனர் என்பதை, அவர்களிடம் அவர் கூறிய யாவற்றையும் கவனித்தால் நமக்குப் புரியும்.

அவர்களுடைய தூய்மைக்காக அவர் ஜெபிக்கிறார். ''நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக் கொள்ளும்படி நான் வேண்டிக் கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்'' (யோவான் 17;15). உலகின் உப்பாக அவர்கள் பயன்பட வேண்டுமென்பதை அவர் உணர்ந்திருந்தார். தூய்மையாகவும், சுத்தமாகவும் அவர்கள் விளங்க வேண்டிய அவசியமிருந்தது.

பிறமக்களிடமிருந்து மாறுபட்ட, புனிதமான ஒரு வாழ்க்கையை அவர்கள் வாழவேண்டியவர்களாயிருந்தனர்.

அவர்களுடைய ஒற்றுமைக்காக அவர் ஜெபிக்கிறார். ''அவர்கள் ஒன்றாயிருக்க'' நமது தேவன் அடிக்கடி ஜெபித்து வந்ததைக் காண முடிகிறது (யோவான் 17:11,21) பிரிவினை விளைவிக்கும் மோசமான இடர்பற்றி அவர் அறிவார். விசுவாசமற்ற ஒரு உலகை உருவாக்குவதே பிரிவினையின் விலை என அவர் அறிவார். தகுதியற்ற, ஒரு பெரும் விலையை பிரிவினைக்கு த்தரவேண்டியது வரும் என அவருக்குத் தெரியும்.

சபைக்காக, இயேசு மட்டும் தனித்து ஜெபிக்கவில்லை. நாமும் ஜெபிக்கவேண்டும் என்பதைக் கற்றுத்தந்தார் என்பதை நினைவில் கொள்வோம் (மத் 6:9-13).

## 8, சபைக்காக அவருடைய திட்டங்களைப் பாருங்கள்

இயேசு இவ்வுலகில் அவதரித்தபோதே சபைக்கான திட்டங்-

களோடு அவர் வந்தார் என்பதில் சந்தேகமில்லை. இவ்வுலகிற்கு வந்தபின் தீட்டிய திட்டமல்ல அது. யூதர்கள் அவரை மீட்பராக ஏற்றுக்கொள்ள மறுத்த காரணத்தால் அது உருவாகவில்லை. அவருடைய தீவிர ஊழியத்காலத்தின் துவக்க முதல் அவர் செய்து வந்த சகல காரியங்களும் இதை தெளிவுபடுத்துகின்றன. பரலோக இராஜ்ஜியம் சமீபத்தில் இருக்கிறது என அவர் அறிவித்தார். (மத் 4:17) அவர் அவ்வாறு குறிப்பிட்டது சபையையன்றி வேறு எதையும் அல்ல. வேறு எந்த ஒரு நிறுவனத்தையும் மனதில் நினைத்-துக் கொண்டு அப்போது பேசவில்லை. ''என் பிதா எனக்கு ஒரு இராஜ்ஜியத்தை ஏற்படுத்தினது போல, நானும் உங்களுக்கு ஏற்படுத்துகிறேன். நீங்கள் என் இராஜ்ஜியத்திலே என் பந்தியில் போஜனபானம் பண்ணி, இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்-களையும் நியாயந்தீர்க்கிறவர்களாய்ச் சிங்காசனங்களின் மேல் உட்காருவீர்கள் என்றார்'' (லூக்கா 22:29-30). ஐயப்பாடு எதுவுமின்றி, இது கர்த்தரின் பந்தியைப் பற்றிக் கூறப்பட்டது. கர்த்தரின் பந்தி. சபை ஆராதனையில் இடம் பெறுவது நமக்குத் தெரிந்ததே. (1கொரி. 11:23-26). ஆனால், அது தனது இராஜ்ஜி-யத்தில் நடப்பதாக இயேசு கூறுகிறார். எனவே, இராஜ்ஜியமும் சபையும் ஒன்றே என்பது தெளிவு. சபை, இராஜ்ஜியம் என்ற இரு பதங்களும் மத்தேயு 16:16-19 வசனங்களில் மாறி மாறி ஒரே பொருளைக் குறிப்பதைக் காண்க. தனது சபையைக் கட்டு-வதாகவும், இரஜ்ஜியத்தின் திறவுகோல்களைத் தருவதாக அவர்-களிடம் தெரிவித்த போதும், அவை இரண்டும் சபையைக் குறிப்-பதை நாம் காண்கிறோம். தனது சபையைக்கட்டும் திட்டத்தை அவர் ஏற்கனவே வைத்திருந்தார்.

## 4. சபையின் மக்கள் தொகையைப் பாருங்கள்

சபையில் அங்கம் வகித்த மக்களைப் பற்றி நீங்கள் ஒரு நிமிடம் நிதானமாக சிந்தித்துப்பார்த்தால் சபையைப் பற்றிய தேவனுடைய கருத்து உங்களுக்கு விளங்கும். ''இரட்சிக்கப்படுகிற வர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்து கொண்டு வந்தார் என சபை அங்கத்தினர்கள் பற்றி லூக்கா விவரிக்கிறார். (அப் 2;47).

சாத்தானை உதறித் தள்ளி விட்டு, ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ் செய்ய வந்த, உலகிலேயே உத்தமர்களான மக்களை அங்கத்தினர்களாகக் கொண்டதே சபை. இருளிலிருந்து ஒளிக்கு வந்த மக்கள் இவர்கள்.

சபையானது தூய்மைக்கு பேர் போனது. மனிதன் அதை பரிசுத்தமாகவும் சுத்திகரிக்கப்பட்ட நிலையிலும் வைத்துக் கொள்-

வர்னாக. (எபே. 5:26; 1 பேதுரு 1:22-23). கறை, திரையற்று, குற்றமற்று, பரிசுத்தமாக சபை விளங்க வேண்டுமென்று இயேசு விரும்புகிறார்.

சபையில் அங்கம் வகிப்பவர் இரட்சிக்கப்பட்டிருக்க வேண்டும்; தேவனுடைய நியமங்களையும் கட்டளைகளையும் நிறைவேற்று கிறவராயும் இருக்க வேண்டும். இத்தகுதிகள் அற்ற எவரும் சபையில் அங்கம் வகிக்க இயலாது.

## 5. சபைக்காக அவர் ஆயத்தப்படுத்திய இடத்தைப் பாருங்கள்

அவருடைய சீடர்களுக்கு ஒரு வாசஸ்தலத்தை ஆயத்தம் பண்ணப் போவதாக இயேசு கூறவில்லையா? (யோவான் 14:1-3) அவர்களுக்குப் பரலோகத்திலே ஒரு இடத்தை ஆயத்தப்படுத்தப் போவதாகச் சொன்னார். பவுல், தான் மரித்த பின்னர் கிறிஸ்துவுடனே கூட இருக்க ஆசைப்பட்டபோது, இதே இடத்தை மனதில் கொண்டு தான் அவ்வாறு கூறுகிறார். (பிலிப் 1:21-23). சபைக்காக தேவன் ஒதுக்கிய இடத்தைப் பற்றி பவுல் அறிவார். இரட்சிக்கப்பட்ட சகல மக்களுக்கும் ஒதுக்கப்பட்ட வாசஸ்தலத்தில் அவருக்கும் ஒரு இடம் உண்டு. அதற்கு குறைந்த எதுவும் திருப்திப்படுத்தாது.

சபையைப் பற்றி பவுல் என்ன நினைத்தார் என்பதை நாம் அறிவோம். அதுபோலவே நாமும் நடப்போம்.

**வின்பெரட் கிளார்க்** — **எஸ்.எஸ்.ராஜன்**

---

பயனுள்ள பேச்சு

**நாம் எல்லோரும் கிறிஸ்துவின் அவயங்களாய் இருப்பதால், நீங்கள் பொய்யைக் களைந்து ஒருவரோடொருவர் உண்மையைப் பேசுங்கள். நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ் செய்யாதிருங்கள். சூரியன் அஸ்தமிப்பதற்குமுன் உங்கள் சினம் தனியக் கடவது. பிசாசுக்கு இடங்கொடாதிருங்கள். திருடுகிறவன் இனித் திருடாமல் குறையுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாய் தனக்கு உண்டாயிருக்கும்படி தன் கைகளால் நல்ல வேலை செய்து உழைக்க கடவன். தீய வார்த்தைகள் ஒன்றும் உங்கள் வாயிலிருந்து வரலாகாது. அவசியத்திற்கேற்றபடி பக்தி விருத்திக்கேதுவான நல்ல வார்த்தை உண்டானால் கேட்கிறவர்களுக்குப் பயன்படும்படி அதையே பேசுங்கள்**

**எபேசியர் 4:25-29**

# அன்றாட கிறிஸ்தவ வாழ்க்கை

நமது தினசரி அலுவல்களில் கிறிஸ்தவத்துக்கு உரிய பங்கைக் கொடுத்தால் மட்டுமே நமது கிறிஸ்தவ வாழ்க்கை அர்த்தமுள்ளதாக விளங்க முடியும் ''வாரத்துக்கு ஒருமுறை'' அல்லது'' மாதத்திற்கு ஒரு முறை'' என்ற கருத்து புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவத்துக்கு ஏற்புடையதல்ல. இஸ்ரவேல் மக்கள் வனாந்தரத்திலே ஒவ்வொரு நாளும் மன்னாவை சேகரித்தது போல, கிறிஸ்தவனும் தினமும் ஆவிக்குரிய ஆகாரத்தைச் சேகரித்துக் கொள்ள வேண்டும் (யாத் 16:4)

''ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக் கடவன்'' என இயேசு கூறினார். (லூக்கா 9:23). கிறிஸ்துவுக்காக வாழும் ஒவ்வொரு நாளும் நமக்குப் புதுப்புது சவால்களை விடுகிறது என்றாலும், நாம் எடுக்கும் சகல முடிவுகளிலும் தேவனை முன்னிருத்தி செயல்பட வேண்டுமென்ற தீர்மானத்தை உறுதியாகக் கடைப்பிடிக்க வேண்டும். (மத் 6:33).

கிறிஸ்துவின் சிலுவையை சுமந்து கொண்டு செல்வதென்றால், கழுத்தில் ஒரு சிறு சிலுவையை தொங்க விட்டுக் கொண்டு அலைவதல்ல. கிறிஸ்துவைப் போல தன்னை வெறுத்து, பிறருக்காக ஜீவனையும் கொடுத்த கிறிஸ்துவின் சீரிய முன்னுதாரணத்தைப் பின்பற்றிக் நாம் வாழ வேண்டுமென்பதே பொருளாகும்.

இவ்வாறாக தினமும் நடந்து வந்தால், நமக்கும், நமது முன் மாதிரியான வாழ்க்கையால் கவரப்பட்டவர்களுக்கும் கிறிஸ்தவம் அர்த்தமுடையதாக விளங்கும்.

இயேசுவுக்காக வாழ நாம் முயற்சிக்கையில் மற்றுமோர் முக்கியமான காரியத்தை நாம் நினைவில் கொள்ள வேண்டும். தினமும் வேத வசனங்களைப் படித்து இயேசுவைப் போல நடந்து கொண்டால் நமது வழியில் தோன்றும் தடங்கல்கள் யாவற்றையும் தகர்த்தெறியத் தேவைப்படும் பலத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். முயல்வோம்.

**கிளன் எலியம்** **எஸ். எஸ் ராஜன்**

YOUR ATTENTION PLEASE!

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
The Voice of Truth, Post Box 3815, New Delhi- 110049
Mondays-9:00 to 9: 5 P. M.
Fridays - 7:45 to 8:00 P. M.

**HINDI** Satya Susasamachar-Speaker : Sunny David.
Satya Susasamachar, Post Box 3815, New Delhi- 110049
Thursdays-9:00 to 9-15 P. M.
Fridays- 9:00 to 9:15 P. M.
Tuesdays-9 00 to 9:5 P. M.
Sundays-12 45 to 1: 00 P. M.

**TELUGU** The voice of Truth-Speaker: Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Sundays-2.15 to 2:30 P. M.
Tuesdays-2:15 to 2:30 P. M.
Thursdays-2:15 to 2:30 P. M.
Fridays -2:15 to 2:30 P. M.
Saturdays-2:15 to 2:30 P. M.

**TAMIL** The Way of Truth-Speaker : P. R. Swamy.
The way of Truth, Post Box 8405, Bangalore 560084
Tuesdays-5:30 to 5:45 P.M.
Thursdays-6:45 to 7:00 P.M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM** The Voice of Truth-Speaker: P. K. Varghese
Church of Christ Sunny Meads Lane Trivandrum-34 (Kerala)
Tuesdays-3:45 to 4:00 P.M.
Fridays-3:45 to 4:00 P.M.

**KANNADA** The Voice of Truth-Speaker : Robert Rathnakar
Box No 448, Bankalore 560004.
Sundays - 1:45 to 2:00 P.M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bibie Correspondence Courses and Christian Literature are avilable in these different languages from the addresses listed he radio sermons are available lion boVsok form.

## பாட்டுப் புத்தகம் கிடைக்கும்

20. M.M. ரெக்ஸின் அட்டை போட்டு, சிறந்த முறையில் பைண்டிங் செய்யப்பட்ட சுமார் 226 பாடல்கள் அடங்கிய பாட்டுப் புத்தகங்கள் விற்பனைக்கு உள்ளன. தபால் செலவு உட்பட ஒரு பாட்டுப் புத்தகத்தின் விலை ரூ. 10/- மட்டுமே.

**வேண்டுவோர் தொடர்பு கொள்க :**

E.Z. செல்வ நாயகம், 2, மணல்மேடு வீதி,
ஈரோடு - 638 002.

Published by Church of Christ and Printed at Jeevasakthi Press
Erode-638 003.

Editor. E.Z. Selvanayagam.

TO

PRINTED MATTER BOOK-POST

If undelivered please return to:
The Editor
THIRUMARAI AASAAN
Post Box No: 58 ERODE-638 001.